[1995 ஏப்ரல் 7

2. சிறப்புக் கவன ஈர்ப்பு

காரைக்குடியில் குடிநீர்ப் பிரச்சினையை முன்வைத்து உண்ணாவிரதம் மேற்கொள்ளப்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: காரைக்குடியில் குடிதண்ணீர்ப் பிரச்சினையை முன்வைத்து உண்ணாவிரதம் இருந்து வருவதுபற்றிய ஒரு பிரச்சினையை, பேரவை விதி 56-ன் கீழ் ஒத்திவைப்புத் தீர்மானமாக எழுப்பவேண்டுமென்று நேற்றையதினம் உறுப்பினர்கள் திரு .ஜி. பழனிசாமி, திரு.இரா. தாமரைக்கனி ஆகியோர் என்னிடத்தில் அறிவிப்பு ஒன்றைக் கொடுத்திருந்தார்கள். பேரவையில் காவல்துறை மானியக் கோரிக்கையின் மீது விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எனவே இவ்வளவு முக்கிய விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நேரத்தில், அந்தப் பிரச்சினையை ஒத்திவைப்புத் தீர்மானமாக அனுமதிப்பதற்கில்லை என்று நேற்றையதினமே நான் தெரிவித்திருந்தேன். இருந்தாலும், அது முக்கியமான பிரச்சினை என்று உறுப்பினர்கள் வற்புறுத்துகின்ற காரணத்தால், அதை, சிறப்புக் கவன ஈர்ப்பாக அவையின் கவனத்திற்குக் கொண்டு வரலாம் என்று அனுமதிக்கிறேன். சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானமாக எடுத்துக் கொள்கின்ற காரணத்தால், அந்தத் தொகுதியின் உறுப்பினர் திருமதி கற்பகம் இளங்கோ அவர்கள் கொடுத்திருக்கின்ற அந்த அறிவிப்பையும் சேர்த்து எடுத்துக்கொள்கிறேன். திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பசும்பொன் மாவட்டம் காரைக்குடியிலிருந்து, திருப்பத்தூருக்கு ஆழ்குழாய் மூலம் ஊற்றுத்தண்ணீர் எடுத்துச் செல்வதற்கு, அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது. காரைக்குடியில் இருக்கிற அந்தப் பகுதி மக்களுக்கு ஏற்கெனவே தண்ணீர் தட்டுப்பாடு இருக்கின்ற காரணத்தினாலும், போதுமான அளவுக்கு அந்தப் பொதுமக்களுக்குத் தண்ணீர் கிடைக்காத காரணத்தாலும், தொடர்ந்து அந்த நகரத்தில் இருக்கிற மக்கள் அரசாங்கத்திற்குத் தெரியபடுத்திக் கொண்டு வருகிறார்கள். அதோடு, இந்த ஒரு பெரிய திட்டத்தை அதாவது காரைக்குடியிலிருந்து திருப்பத்தூருக்குத் தண்ணீரைக் கொண்டுபோகும்போது, அந்த ஏரியா மக்களுக்கு தண்ணீர் வழங்க மாற்று ஏற்பாடு எதுவும் இல்லாத காரணத்தால், அங்கு பழ. கருப்பையா என்பவர் இன்றைக்கு 13-வது நாளாக தொடர் உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். இதனால் பொதுமக்களுக்குப் பல பாதிப்புகள் எல்லாம் உண்டாகியிருக்கின்றன. மேலும் நாட்கள் கடந்து கொண்டிருக்கிற காரணத்தால் ஒரு பதட்டமான

சூழ்நிலை அங்கே ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சருக்கு நான் சொல்வது என்னவென்றால், இதுபோன்ற பல்வேறு பிரச்சினைகள் தமிழ்நாட்டில் இருக்கின்றன. ஆகையால் அந்தப் பகுதி மக்களுடைய தேவையைப் பூர்த்தி செய்து (குறுக்கீடுகள்) ஒன்றும் ஆகவில்லையே (குறுக்கீடு) என்ன ஆகிவிட்டது?

முற்பகல் 11.20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பழனிசாமி, கேளுங்கள், நீங்கள் காரைக்குடி என்று ஆரம்பித்து பல்வேறு பகுதிகள் என்று சொன்னால், அமைச்சர் பதில் சொல்ல வேண்டுமல்லவா?

திரு. ஜி. பழனிசாமி: நான் எதுவும் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் எதுவும் சொல்லவில்லை என்பதற்காகத்தான் சொல்கிறேன். எதுவும் சொல்லாமல், திடீரென்று தமிழ்நாடு பூராவும் என்று ஆரம்பித்துவிட்டால் விவாதம் நீண்டு கொண்டே போகும். காரைக்குடியோடு நிறுத்துங்கள்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகவே, அந்தக் காரைக்குடியில் இருக்கிற மக்களுடைய தேவைகளை பூர்த்தி செய்வதோடு—அந்தத் திருப்பத்தூர் பகுதிக்கு தண்ணீர் எடுக்கிற திட்டத்தை நிறுத்துங்கள் என்று நான் சொல்லவில்லை. ஆகவே, காரைக்குடி மக்களுடைய தேவைகளை கணக்கில் எடுத்துக் கொண்டு திட்டத்தை வகுத்து நிறைவேற்றித் தர வேண்டும். இப்படி 13 நாட்கள் உண்ணாவிரதம் இருந்தும்கூட, அரசுத் தரப்பிலிருந்து என்னவென்றுகூட ஒரு தகவல் கேட்கவில்லை. மாவட்ட ஆட்சித் தலைவர், காவல் துறை அதிகாரிகள், இன்னும் மற்ற ரெவின்யூ துறை அதிகாரிகள், இது சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் அவரிடத்தில் அணுகி அந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணாமல் காலம் கடத்துவது என்பது சரியல்ல என்பதை தங்களுடைய கவனத்திற்கு கொண்டு வந்து, இதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி கற்பகம் இளங்கோ.

திருமதி கற்பகம் இளங்கோ: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எந்த எண்ணத்தின் அடிப்படையில் காரைக்குடி தொகுதி சட்டமன்ற உறுப்பினராக என்னை நியமித்தார்களோ அந்த எண்ணத்தை ஈடேற்றும் வகையில் காரைக்குடி தொகுதி மக்களுக்கு ஒரு சிறு பிரச்சினையாக இருந்தாலும் எந்தச் சூழ்நிலையிலும் அதைத்

தீர்ப்பதற்கு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆசியுடனும், உறுதுணையுடனும் தயாராக இருக்கிறேன் என்பதை இந்த நேரத்தில் தெளிவுபடுத்திக் கொண்டு, காரைக்குடி நகரத்தில் குடிநீர் ஆதாரம் அளவுக்கு அதிகமாக இருந்தாலும், குடிநீர் விநியோகம் 24 மணி நேரமும் அந்தப் பகுதி மக்களுக்கு கிடைப்பதில்லை என்பது உண்மைதான். யாருக்கு எந்த நேரத்தில் எது தேவை என்பது குறிப்பறிந்து செயலாற்றும் திறமை படைத்த மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) கோரிக்கை வைப்பதற்கு முன்பே, அந்தத் திட்டத்தை நிறைவேற்றும் எண்ணத்தில் ரூ.60 இலட்சம் நிதியொதுக்கீடு செய்து அதையும் விரைவில் நிறைவேற்றி இருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் காரைக்குடி நகர மக்களுக்கு குடிநீர் கிடைக்கவேண்டுமென்ற எண்ணத்தில்தான், கோரிக்கை வைப்பதற்கு முன்பே அந்தத் திட்டத்தை நிறைவேற்றியுள்ளார்கள் என்பதை இந்த அவைக்குத் தெளிவுபடுத்திக் கொண்டு, நம்முடைய முதல்வர் அவர்களின் உத்தரவுப்படி மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கடந்த அக்டோபர் மாதம் காரைக்குடிக்கு வருகைதந்து அங்கே ஒரு தெளிவான அறிக்கையையும் மக்களுக்கு கொடுத்து வந்தார்கள். ஆனால், அதைக் கருத்தில் கொள்ளாமல் சிலர் அரசியல் நோக்கோடு, சில புல்லுருவிகள் இதனைத் தவறாகப் பயன்படுத்தி (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் மத்தியில் அதனை துஷ்பிரயோகம் செய்ய வேண்டுமென்று...

திரு. ஜி. பழனிசாமி: இப்படியெல்லாம் பேசலாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: யாரையும் சொல்லவில்லையே? (குறுக்கீடு) குறிப்பிட்ட ஒருவரைச் சொல்லவில்லை. (குறுக்கீடு) அவர் முடிக்கட்டும் சொல்கிறேன். உட்காருங்கள், மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்களைக் குறிப்பிடவில்லை. அங்கே காரைக்குடியில் லோக்கல் புல்லுருவிகள் சிலர் (மேசையைத் தட்டும் ஒலி) இதிலிருந்து அரசியல் ஆதாயம் தேடி வருகிறார்கள் என்றுதான் சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் பொதுவாக, தவறானவர்கள் கூட உள்ளே நுழைந்து கொண்டு செய்கிறார்கள் என்ற அர்த்தத்திற்கு வருகிறார்கள்.

1995 ஏப்ரல் 7]

திருமதி கற்பகம் இளங்கோ: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கூறியபடி அங்கே காரைக்குடி நகரத்தில் அரசியல் ஆதாயம் தேடுவதற்குத்தான் இதை திசை திருப்பி வருகிறார்கள் என்பதை மீண்டும் உறுதிப்படுத்தி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தை துரிதப்படுத்தி விரைவில் அந்த மக்களுக்கு 24 மணி நேரம் குடிநீர் கிடைக்கும் என்பதில் எந்தவிதமான தங்குதடையும் கிடையாது என்று இன்றே இப்பேரவை மூலம் அறிவிப்பதுதான் அந்த அரசியல் ஆதாயம் தேடுபவர்களுக்கு தாங்கள் கொடுக்கும் பதிலடி என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொண்டு, அதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11.25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இரா. தாமரைக்கனி.

திரு இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மத்தில் சிறந்தது தண்ணீர் வழங்கும் தர்மம்தான். தாகத்திற்கு தண்ணீர் கொடுக்காதவனைப் பற்றி தமிழ் பழமொழியே உண்டு. அந்த காரைக்குடி பகுதியில் 200 ஆண்டுகளுக்குத் தேவையான தண்ணீர் சோர்ஸஸ் உள்ளது என்று குடிநீர் வடிகால் வாரிய என்ஜினியர்கள் ஆய்வு செய்திருக்கிறார்கள். அதனால் தண்ணீர் இல்லாத திருப்பத்தூர் பகுதிக்கு தண்ணீர் எங்கே இருக்கிறதோ அங்கேயிருந்து தண்ணீர் கொடுப்பதில் எந்தவிதமான தவறும் கிடையாது. இது காரைக்குடி மக்களுக்குதான் பெருமை சேர்க்கும். இவ்வாறு குறுகிய எண்ணத்தோடு இருந்தால்—நாட்டு மக்களுக்கு ஒரு பெருந்தன்மை வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) குறுகிய எண்ணத்தோடு இருந்தால் எப்படி காவிரி நீர் நமக்குக் கிடைக்கும்? பெரியார் ஆற்று நீர் எப்படி கிடைக்கும்? கிருஷ்ணா நதித் தண்ணீர் எப்படி சென்னைக்குக் கிடைக்கும்? இதை எல்லாம் உணர்ந்து பார்க்க வேண்டும். தண்ணீரிலே அரசியல் செய்வது, நிலத் தகராறின் மீது அரசியல் பண்ணுவது, புறம்போக்கு நிலத்திலே அரசியல் செய்வது, கட்சிக்கு ஆள் இல்லை என்றால் இப்படித் தண்ணீரிலே அரசியல் செய்தால் (மேசையைத் தட்டும் ஒலி) எப்படி நாடு உருப்படும்? ஆகவே, இதெல்லாம் விஷமப் பிரச்சாரம். அரசுக்கு விரோதமாக விஷமப் பிரச்சாரம் பண்ணுவோர்மீது நடவடிக்கை எடுக்கவேண்டும். ஆகவே, இது தேசத் துரோகம். (மேசையைத் தட்டும் ஒலி) குடிக்கத் தண்ணீர் வேண்டும். தாகத்திற்குத் தண்ணீர் வேண்டும். அந்தத் தண்ணீர் எங்கே இருக்கிறதோ, அங்கேயிருந்து தண்ணீர் எடுத்துக் கொண்டு போகவேண்டும்.

ஆனால் எடுக்கவே கூடாது என்று பொதுமக்களைத் தூண்டி விடுவது, அரசுக்குக் கெட்ட பெயரை ஏற்படுத்துவது, இதெல்லாம் தேசத் துரோகம். ஆகவே, இப்படி தேசத் துரோகம் செய்பவர்களை, தூண்டி விடுபவர்களை இந்திய அரசியல் சட்டப்படி, தேசிய பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி.) பொதுமக்களுக்கு நல்லமுறையில் அரசினுடைய திட்டங்களை விளக்க பிரச்சாரம் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ்.வி. சண்முகம்: தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் கிளாரிபிகேசன்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே வராது. அறிவிப்புக் கொடுத்தவர்கள்தான் கேட்க முடியும். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு காரைக்குடி நகராட்சிக்காக 1978 ஆம் ஆண்டு அங்கேயிருக்கிற செம்பையூத்தை நீர் ஆதாரமாகக் கொண்டு, ஒரு பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டம் செயலாக்கப்பட்டு வந்தது. இந்தத் திட்டம் அன்றைய காலகட்டத்திலே வடிவமைக்கப்பட்டபோது காரைக்குடி நகரிலேயிருந்த மொத்த மக்கள் தொகையே 50 ஆயிரம்தான். அந்த அடிப்படையில் அன்றைக்கு சுமார் 7 ஆழ்துளைக் கிணறுகள் அங்கே அமைக்கப்பட்டு கிட்டத்தட்ட 35 லட்சம் லிட்டர்கள் குடிநீர் வழங்கப்படுகிற ஒரு திட்டத்தை நிறைவேற்றி, அந்தத் திட்டம் இன்றைக்கும் செயல்பாட்டிலே இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில், காரைக்குடி நகரத்தினுடைய தற்போதைய மக்கள் தொகை 75 ஆயிரத்திற்கும் மேலாக உயர்ந்திருக்கிறது. இந்த மக்கள் தொகைக்கு தற்போது இருக்கிற நிலவரத்திலே நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 70 லிட்டர்கள் வீதம் - ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு கொடுக்கக்கூடிய வகையில் நீரின் அளவு தேவைப்படுகிறது. அந்த அடிப்படையில், மொத்தமாக இன்றைக்கு ஒருநாளைக்கு 51,59,000 லிட்டர்கள் இன்றைய கால கட்டத்தில் இன்றைக்கு இருக்கிற மக்கள் தொகையின் அடிப்படையில் தேவைப்படுகிறது. இந்தச் சூழ்நிலையில், நம்முடைய மாண்புமிகு காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் என்னிடத்திலே இதுசம்பந்தமாக அங்கே ஒரு அபிவிருத்தித் திட்டம் உருவாக்கப்படவேண்டும் என்று கடந்த ஜனவரி மாதமே மனுவைக் கொடுத்து, எடுத்துரைத்திருந்தார்கள். அந்த அடிப்படையில், நாங்கள் வாரியத்திற்கும், இதுசம்பந்தமாக ஆய்வை மேற்கொள்ளவேண்டும் என்று

காரைக்குடி நகருக்கு குடிநீர் அபிவிருத்தித் திட்டம் வழங்கப்படவேண்டும் என்ற அடிப்படையில், ஆணை பிறப்பித்து இருந்தோம். அந்த அடிப்படையில், குடிநீர் வடிகால் வாரியம் அங்கே குடிநீர் அபிவிருத்தித் திட்டத்திற்காக ஆய்வை மேற்கொண்டிருந்தது. அந்தச் சூழ்நிலையில் அங்கே சிலர் அதை அரசியல் ஆதாயமாக ஆக்க வேண்டும் என்ற அடிப்படையிலே முயற்சிகளை மேற்கொள்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடத்திலே தெரிவித்தபோது, நானே நேரடியாக கடந்த 22-10-1994 அன்று காரைக்குடி நகருக்குச் சென்று, அந்தக் குடிநீர் ஆய்வை அங்கே மேற்கொண்டபோது, அங்கே பல்வேறு பிரச்சினைகளை பொதுமக்களே என்னிடத்திலே எடுத்துரைத்தார்கள். அந்த அடிப்படையிலே அங்கே தெளிவான ஒரு அறிக்கையும் பொதுமக்களுக்கு விவரமாக எடுத்துச் சொல்லி, அங்கே போதிய அளவு குடிநீர் ஆதாரம் இருக்கிறது, அரசும் ஒரு ஆய்வை மேற்கொண்டிருக்கிறது, காரைக்குடி நகருக்குப் போதிய குடிநீர் வழங்குவதற்கு அத்துணை ஆயத்தங்களையும் மேற்கொண்டு இருக்கிறது, ஆய்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லிவிட்டு வந்தேன். கூடியவிரைவில் காரைக்குடி நகருக்காக, அபிவிருத்தித் திட்டமும் உருவாக்கப்படும், அதற்குண்டான மதிப்பீடும் தயாரிக்கப்பட்டு இருக்கிறது என்று அன்றைய காலகட்டத்திலே நான் எடுத்துரைத்துவிட்டு வந்தேன். அதற்குப் பிறகு இன்றைக்கு நாடு முழுவதும் பாதுகாக்கப்பட்ட குடிநீரை வழங்கிக் கொண்டிருக்கிற நம்முடைய இதய தெய்வம், தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) குடிநீருக்கு என்று பல்வேறு முன்னுரிமைகளை வழங்கிக் கொண்டு இருக்கிற காரணத்தாலே, அங்கே அருகாமையிலே இருக்கிற திருப்பத்தூர் பேரூராட்சிக்கும் ஒரு குடிநீர்த் திட்டம் வழங்கப்படவேண்டும் என்று மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களிடத்திலேயிருந்து கோரிக்கையைப் பெற்று, இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்கள் கடந்த 9-7-1993 அன்று சுமார் 2 கோடியே 53 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே திருப்பத்தூர் பேரூராட்சிக்கு இன்றைய சூழ்நிலையிலே குடிநீர் அபிவிருத்தித் திட்டம் வழங்கப்படவேண்டும் என்று அரசு ஆணையை வழங்கினார்கள். தமிழகத்திலே ஒரு ஊருக்கு குடிநீர் வழங்கவேண்டும் என்று சொன்னால், அந்த ஊரிலே குடிநீர் ஆதாரம் இருக்காது. The source will not be available in the same place. அருகாமையிலே இருக்கிற நதியிலிருந்து எடுக்கவேண்டிய சூழ்நிலை இருக்கும். அல்லது அருகிலே, தொலைதூரத்திலே இருக்கிற நீரூற்றின் மூலமாக அங்கே குடிநீர் எடுத்து வரவேண்டிய சூழ்நிலை இருக்கும். அந்த பட்சத்திலே இந்த திருப்பத்தூர் பேரூராட்சிக்கு என்று காரைக்குடியிலே அமையப்பெற்றிருக்கிற அந்த

நீரூற்றிலேயிருந்து ஆழ்குழாய்க் கிணறுகளை அமைத்து, இந்தக் குடிநீர் அபிவிருத்தித் திட்டத்தை உருவாக்கினால்தான், இந்தத் திட்டத்தை ரூ. 2கோடி 53 லட்சத்திலே அதை செய்து முடிக்க முடியும் என்று அரசும் கருதி அதற்கு ஆணை பிறப்பித்து, அங்கே இன்றைக்கு பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதற்கு முன்பாகவே காரைக்குடி நகரத்திலேயும் இந்தப் பிரச்சினை இருக்கிற காரணத்தாலே இன்றைக்கு 35 லட்சம் லிட்டர் மட்டும் தான் வினியோகிக்கப்படுகிறது.

முற்பகல் 11 -30

அங்கே ஏற்படுத்தப்பட்ட அந்த குடிநீர் திட்டம் 1978-லே உருவாக்கப்பட்டது. அங்கேயிருக்கிற மோட்டார் பழுதடைந்த நிலையிலே இருக்கிறது. அது பழுதடைந்து இருக்கிற காரணத்தினாலே, புதிய அபிவிருத்தித் திட்டத்தை உருவாக்க வேண்டும் என்ற அடிப்படையிலே தான் நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே காரைக்குடி நகருக்கு புதிய அபிவிருத்தித் திட்டத்தை (மேசையைத் தட்டும் ஒலி) செய்தாக வேண்டும் என்று இந்தத் துறைக்கு ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே காரைக்குடி நகரத்திற்கு இன்றைக்கு அங்கே இருக்கிற பழைய பகிர்மான குழாய்கள் எல்லாம் மாற்றப்பட்டு புதிய குழாய்களை அமைப்பதற்காகவும், அங்கே காரைக்குடி நகரத்தின் மக்கள் பெருக்கத்தின் காரணமாக பல்வேறு 'ஆட்ட் ஏரியா' சொல்கிற பல்வேறு புதிய பகுதிகளும் உருவாக்கப்பட்டிருக்கிறது. அதில் சுமார் 7.5 கிலோ மீட்டர் அளவுக்கு புதிய குழாய்கள் பதிக்க வேண்டியிருக்கிறது. அதற்கும் சேர்த்து புதிய மின் மோட்டார்கள், மின் இறைப்பான்களை இங்கே போடுவதற்காகவும் புதிதாக 6 ஆழ்குழாய் கிணறுகள் அங்கே இருக்கின்றன, அந்த செம்பை ஊற்றுப் பகுதியிலே போடுவதற்காகவும் அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. இதில் அங்கே இருக்கின்றவர்கள் இந்தப் பிரச்சினையில் ஏதாவது அரசியல் ஆதாயம் தேட வேண்டிய அடிப்படையிலே—நான் காரைக்குடி நகரத்திற்கு சென்று அங்கே இருக்கிற மக்களுக்கு தெளிவாக அரசினுடைய கருத்துக்களை எடுத்து வைத்ததற்கு பிறகு, அங்கே இருக்கிற ஒரு நபர், ஒரு திட்டம் இந்த அரசால் ஏற்கெனவே உருவாக்கப்பட்டு விட்டது என்பதை உணர்ந்து, தெரிந்து கொண்டு, ஏதாவது போராட்டம் நடத்தினால், அந்தப் போராட்டத்தின் விளைவாகத்தான் இந்தக் குடிநீர் திட்டம் வந்தது என்ற மாயையை உருவாக்குவதற்காக இந்தப் பிரச்சினையிலே அரசியல் ஆதாயம் தேடுவதற்காக அங்கேயிருக்கிற அப்பாவிப் பொது மக்களை திசை திருப்புகிற சூழ்நிலையில் ஒரு நபர் நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள்,

LEGISLATURE TRUTH ALONE TRIUMPHS

அங்கே சரியான குடிநீர் ஆதாரம் இல்லை என்று. இது சம்பந்தமாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஒரு டீடெய்ல்டு இன்வெஸ்டிகேஷன் எடுத்தது. ஒரு விரிவான ஆய்வை அங்கே மேற்கொண்டது. அதன் அடிப்படையிலே காரைக்குடி பேரூராட்சிக்கு தலைமைப் பணி இடம், ஹெட் வொர்க்ஸ்-அங்கே இருந்து தான் தண்ணீர் எடுக்க வேண்டும். இந்த ஹெட்வொர்க்ஸ் அமைக்கப்பட்டிருக்கிற இடம் சம்மையாத்து நீர் ஊற்று வளம் என்று சொல்லுகிற அக்குவாபையர் என்ற நீர் ஊற்று வளம் அந்தப் பகுதியிலே சுமார் 290 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்களுக்கும், அங்கே அரசியல் ஆதாயம் தேடுகிற அந்த நபருக்கும் நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏதோ திருப்பத்தூர் பேரூராட்சிக்கு நீர் எடுத்துச் செல்வதால் காரைக்குடி நகரம் பாதிக்கும் என்று சொல்வதில் எந்தவித உண்மையும் இல்லை என்பதை தெளிவாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தப் பகுதியிலே ஒவ்வோர் ஆண்டும் சராசரி மழை அளவு மட்டும் 1092 மில்லி மீட்டர் இருப்பதாக கணக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அங்கே அமைந்திருக்கிற அக்குவாபையர் நீர் ஊற்று வளம் 6 லட்சத்து 28 ஆயிரம் லட்சம் லிட்டர் அங்கே இருந்து கொண்டிருக்கிறது. 200 ஆண்டுகள் என்று தாமரைக்கனி அவர்கள் சொன்னார்கள். எவ்வளவு நீர் அங்கே எடுத்தாலும் அங்கிருக்கிற நீர் ஊற்று வளம் குறையாத தன்மை உடையது என்பதை அதிகாரிகள் கணக்கெடுத்திருக்கிறார்கள். அது மட்டும் அல்ல இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில் இந்த அக்குவாபையர் என்று சொல்லுகிற நீர் ஊற்று வளத்திலிருந்து விவசாயத்திற்கு மட்டும் 33,500 லட்சம் லிட்டர் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அத்தோடு சேர்த்து காரைக்குடி நகரத்தினுடைய குடிநீர் தேவைக்கு 60 ஆயிரம் லட்சம் லிட்டர்கள் எடுக்கப்படுகிறது. ஆகவே இந்த விவசாயத்திற்கும் காரைக்குடி நகரத்திற்கும் சேர்த்து எடுக்கின்ற மொத்த குடிநீருடைய அளவு இன்றைக்கு 93,500 லட்சம் லிட்டர் மட்டும்தான். இன்றைக்கு அங்கே இருக்கிற மொத்த நீருடைய அளவான 6 லட்சத்து 28 ஆயிரம் லட்சம் லிட்டர்களில் தற்போது பயன்படுத்துகின்ற அளவு, இன்றைக்கு எடுக்கப்படுகின்ற நீரின் அளவு குறைந்தது 14.89 சதவீதம் தான். 85 சதவீதம் நீர் அளவு நீர் ஊற்றில் அங்கே இன்றைக்கும் இருந்து கொண்டிருக்கிறது. இன்றைக்கு திருப்பத்தூர் நகர பேரூராட்சிக்கும் குடி நீர் கொடுத்தாக வேண்டிய கட்டாய சூழ்நிலையில் அரசு இருக்கிறது. இந்த அடிப்படையிலே திருப்பத்தூர் பேரூராட்சி அபிவிருத்தித் திட்டத்திற்காக 7300 லட்சம் லிட்டர்கள் மட்டுமே தேவைப்படுகிறது. இந்த 7300 லட்சம் லிட்டர் எடுத்துக் கொண்டோம் என்று சொன்னால் அங்கே இருக்கிற நீரூற்றின் அளவு ஒரு சதவீதம் தான் பாதிக்கப்படுகிறது.

ஆக எப்படிப் போனாலும் 80 சதவீதத்திற்கு மேலாக அங்கே நீரூற்று வளம் இருக்கிற காரணத்தினால்—இவைகளையெல்லாம் நான் அன்றைக்கு மக்களுக்கு சொல்லிவிட்டு வந்தேன். அன்றைக்கு அந்த காரைக்குடி நகரத்திற்கு சென்றபோது சொல்லிவிட்டு வந்தேன். புரட்சித் தலைவி அவர்கள் இதற்கு ஆணை பிறப்பித்திருக்கிறார்கள் என்றும் சொன்னேன். அத்தோடு மட்டும் அல்லாமல் காரைக்குடி நகருக்கும் குடிதண்ணீர் வழங்க வேண்டும், திருப்பத்தூர் நகரத்திற்கும் குடிதண்ணீர் வழங்கவேண்டும். அங்கே பல்வேறு பகுதிகளுக்கு இப்படி பெரிய நீர் ஆதாரம் இருக்கிற இடத்திலிருந்து நாம் ஏற்கெனவே குடிதண்ணீர் வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

முற்பகல் 11-35

ஆகவே, சிலர் அரசியல் ஆதாயம் தேடுவதற்காக இந்த நடவடிக்கையிலே ஈடுபட்டிருகிறார்கள் என்பதைத் தெள்ளத்தெளிவாக எடுத்துச் சொல்ல வந்தேன். இந்தத் திட்டம் அரசினுடைய ஆய்வில் ஏற்கனவே இருக்கிறது என்பதை நன்றாகத் தெரிந்து கொண்டு, புரிந்துகொண்டு, அங்கே இருக்கிற அந்த நபர் இந்த உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருக்கிறார் என்பதைத் தான் நான் இன்றைக்கு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதோடு மட்டுமல்ல, அந்த நபர் அங்கே ஒரு பொது இடத்திலே உண்ணாவிரம் இருக்கவில்லை. யாரோ ஒரு தனியாருடைய வீட்டிலே உண்ணாவிரதம் என்ற பெயரிலே இருந்து கொண்டிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் இங்கே ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். 13 நாட்களாக உண்ணாவிரதம் இருக்கிற அந்த நபர் ஏன் மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் அங்கே இருக்கிற காவல் துறை அதிகாரிகளிடமும் அங்கே இருக்கிற நிலைமையை எடுத்துச் சொல்லவில்லை என்று சொன்னார்கள். இது சம்பந்தமாக —இந்தப் பிரச்சனை நெடுநாட்களாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அங்கே இருக்கிற அந்த ஆய்வு நீர் ஊற்றினுடைய அளவு எல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவர், கடந்த 28-11-1994 அன்றே இங்கே இருக்கிற அந்த நபர் இடத்திலும் சரி, அங்கே இருக்கிற பொது மக்களுக்கும் சரி, பல்வேறு அரசியல் கட்சிகளையும் கூப்பிட்டு அங்கே இருக்கிற வட்டாட்சி அலுவலகத்திலே ஒரு கூட்டத்தைக் கூட்டி இந்த நிலைமையையெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார். இந்த நிலைமையிலே எந்தவிதப் போராட்டமும் தேவையில்லை. பொதுமக்களைத் தூண்டுகிற அவசியம் ஏற்படவில்லை என்றெல்லாம் அன்றைக்கு 28-11-1994 கூட்டத்திலே மாவட்ட ஆட்சித் தலைவர் தெளிவுபடுத்தி இருக்கிறார். என்னுடைய விஜயத்தின் போதும் நான் அறிக்கை வாயிலாக தெளிவுபடுத்தி இருக்கிறேன்.

அதோடு மட்டும் அல்லாமல் அந்த நபர் உண்ணாவிரதம் இருக்கிறபோதும், நேற்றைக்கு கூட, ஒரு தடவை அல்ல இரண்டு தடவை அல்ல, மாவட்ட ஆட்சித் தலைவரிடம் எடுத்துச் சென்று அதைக் கைவிட்டு விடவேண்டும்— இன்றைக்கு இதிலே அரசியல் ஆதாயம் தேடி பொதுமக்களை திசைத் திருப்பக்கூடாது. இருக்கிற நிலைமை இதுதான். அரசு 60 லட்சம் ரூபாயிலே காரைக்குடி நகருக்கு 6 மாதத்திலே அந்தத் திட்டத்தை வழங்குவதற்குத் தயாராக இருக்கிறது, பணிகளை மேற்கொள்ள இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். ஆகவே இது அரசியல் ஆதாயத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருக்கிற ஒரு நடவடிக்கையே ஒழிய, வேறல்ல. இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் பல பகுதியிலே இப்படி பிரச்சனை என்று சொன்னார்கள். இந்த அரசு பொறுப்பு ஏற்று இரண்டு ஆண்டுகள் ஒரு கட்சியோடு கூட்டணி அமைத்து நீங்களும் இந்த அவையிலே உறுப்பினராக இருந்தீர்கள். ஒரு நாளிலேயாவது இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருப்பீர்களா? இந்தப் பிரச்சனையை ஒரு சமயத்திலே அல்லது ஒரு டிமாண்டிலே எழுப்பி இருப்பீர்களா? நான் கேட்கிறேன். இன்றைக்கு இந்த அரசு ஏற்படுத்தப்பட்ட பிறகுதான் தமிழகத்திலே ஒவ்வொரு குடிநீர்த்திட்டமும் முறையாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. ரெகார்ட் டைம் என்று சொல்கிற அளவிலே இன்றைக்கு புதுக்கோட்டைக்கு குடிநீர் வழங்கி இருக்கிறோம். அதேபோல காஞ்சீபுரம் நகரம், திருவண்ணாமலை நகரம், இன்றைக்கு இருக்கிற சேலம் நகரம். உலக வங்கித் திட்டங்கள் எல்லாம் நீங்கள் கூட்டணி வைத்திருக்கிற கட்சி ஆண்ட காலத்திலே தூசி படிந்துகிடந்தது. புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பிறகு தூசி படிந்த திட்டங்களை எல்லாம் துடைத்து எடுத்து இன்றைக்கு நிறைவேற்றி இருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி). உலக வங்கித் திட்டம் இன்றைக்கு பல்வேறு மாநிலங்களிலே அவர்கள் அந்த உலக வங்கி நிதியை நீடிக்கக் கூடத் தயங்கினார்கள். அதற்கு முறையான உத்தரவைப் பிறப்பித்திருக்கிறார்கள். இந்த அவையிலே கூட நான் ஏற்கனவே தெரிவித்திருக்கிறேன். இன்றைக்கு உலக வங்கித் திட்டமும் தமிழக அரசால் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பிறகு தான் முடிக்கப்பட்டு இன்றைக்கு சுமார் 60 லட்சம் மக்களுக்குப் பயன்படுகிற வகையிலே குடிநீர் தமிழகத்திற்கு வழங்கப்பட்டிருக்கிறது. கிராமக் குடிநீர் திட்டத்திலே மட்டும் ஒரு கோடி மக்கள் பயன்படுகிற வகையிலே 400 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே இந்த 3 ஆண்டு ஆட்சிக் காலத்திலே அத்தனை குடிநீர்த் திட்டங்களும் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. எதிர்காலத்திலே பல்வேறு குடிநீர்த் திட்டங்களை நாங்கள் நிறைவேற்ற இருக்கிறோம். அதைப் போல் தான்

[திரு. டி. எம். செல்வகணபதி]

இந்த காரைக்குடி நகராட்சித் திட்டம் என்பதை எடுத்துச் சொல்லி அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்த கவன ஈர்ப்பு.

திரு. ஜி. பழனிசாமி: நம்முடைய அமைச்சர் அவர்கள் நீண்ட விளக்கம் அளித்திருக்கிறார்கள். நான் அதிலே ஒன்றும் தப்பு என்று சொல்லவில்லை. குடிதண்ணீரிலே . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே பேச முடியாது. இந்த விளக்கத்தின்மீது நீங்கள் வேறு எதுவும் பேச முடியாது (குறுக்கீடு) உட்காருங்கள்.

3. தகவல் கோரல்

உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை குறித்து

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தம்புசாமி, நீங்கள் நாகைப்பட்டினம் அருகே மீனவர்கள் காணாமல் போனது பற்றிக் கொடுத்து இருக்கிறீர்கள். அது பற்றிய முழு விவரமும் மத்திய அரசாங்கத்திடமிருந்து வரவேண்டி இருக்கிறது. இன்னொரு நாட்டிலிருந்தும் விவரங்களைச் சேகரித்துக் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே அதை உடனடியாக இன்றைக்கு எடுத்துக்கொள்ள முடியவில்லை. அந்த விவரங்களையெல்லாம் சேகரித்ததும் எடுத்துக் கொள்கிறேன்.

4. கவன ஈர்ப்பு

(அ) கோவை, உக்கடம், பெரியகுளம் ஏரிப்பகுதிகளில் பழுதடைந்துள்ள தடுப்பு அணையைப் புதுப்பிக்க வேண்டிய அவசியம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. கே. செல்வராஜ்.